CC.No.432/2025 (JM.No.II, DHARMAPURI)

24.02.2026

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரிகள் ஆஜர்)

PW–1 : திரு. தனசேகர், த/பெ. செல்வம்

முதல் விசாரணை

நான் மேல்பூரிக்கல்லில் குடியிருந்து கொண்டு கேபிள் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1–ம் எதிரி என் தங்கையின் கொழுந்தனார், 2–ம் எதிரி கொழுந்தனாரின் மனைவி ஆவார். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 08.00 மணிக்கு மேல் இவ்வழக்கின் சாட்சி–4 ஆன கஸ்தூரி உடல் நிலை சரியில்லாததால் அறுவை சிகிச்சை செய்து கொண்டு என்னுடைய வீட்டில் இருந்தார். என்னுடைய தங்கையை அவருடைய கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். அவரை பார்ப்பதற்காக நானும், என் மனைவி நதியா, மற்றொரு தங்கையான கலைசெல்வி ஆகியோர் சென்றோம். என் தங்கை கஸ்தூரியை பார்த்துவிட்டு வெளியே வந்து இருசக்கர வாகனத்தில் உட்காரும் போது திடீரென்று சக்திவேல், பிருந்தா இருவரும் இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்திருந்த என் மனைவியின் முடியை பிடித்து கீழே இழுத்து தள்ளிவிட்டனர். என் மனைவி கீழே விழுந்ததில் மயக்கம் ஏற்பட்டது. பிரச்சினை வேண்டாம் என்று என்னுடைய மனைவியை அழைத்து கொண்டு செல்லும் போது 2–ம் எதிரி பிருந்தா என் தலையின் பின்புறத்தில் தாக்கியதில் 13 தையல் போடப்பட்டது. தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது நான் போட்டிருந்த 1 ½ பவுன் தங்க செயினை காணவில்லை. அங்கிருந்த தெரிந்த நபர்களை பார்த்து தேடி பார்க்க சொன்னேன். ஆனால் நகைகள் கிடைக்கவில்லை. அங்கிருந்தவர்கள் தொப்புர் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள். சம்பவயிடத்திற்கு 108 ஆம்புலென்ஸ் மூலமாக தொப்பூர் போலிஸ் தான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு தொப்பூர் போலிஸார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். காணாமல் போன 1 ½ பவுன் செயின் இதுநாள் வரை கிடைக்கவில்லை. அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என் தங்கை கஸ்தூரியின் வீடும், எதிரிகளின் வீடு அருகருகே உள்ளது என்றால் சரிதான். என் தங்கையின் கணவர் கோயம்புத்தூரில் வேலை செய்து கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். என் தங்கையும் அவருடன் தான் இருந்தார் என்றால் சரியல்ல, என்னுடைய வீட்டில் தான் இருந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் ஒரு மாதத்திற்கு முன்பிருந்து என் தங்கை என்னுடைய வீட்டில் இருந்தார். என் தங்கையை அவருடைய கணவர் சரிவர கவனிக்கவில்லை என்று பிரச்சினை இருந்ததால் என்னுடன் தங்கி இருந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று தான் என் தங்கை கணவரின் வீட்டிற்கு சென்றார் என்றால் சரிதான். அப்போது அவரின் உடல்நிலை சரியாக இருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என் தங்கை கஸ்தூரியின் கணவர் கோயம்புத்தூரில் இல்லை, வீட்டில் தான் இருந்தார். என் தங்கையின் உடல் நிலையை பார்ப்பதற்காக அவர்கள் வீட்டிற்கு

நானும், என் மனைவியும், மற்றொரு தங்கையும் சென்றோம் என்றால் சரிதான், மேற்படி விவரத்தை போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன். இதை தவிர்த்து மாறாக போலிஸ் விசாரணையில் கூறியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். என்னுடைய தங்கைக்கும், அவருடைய கணவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து காலை 11.00 மணிக்கு என் தங்கை அவருடைய வீட்டிற்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று சென்றார். மாலை சுமார் 06.00 மணிக்கு என் தங்கையை பார்க்க சென்றேன். என் தங்கையின் உடல்நிலை சரியாகிவிட்டதால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று என் தங்கையை பார்க்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லபடும் அன்று என் தங்கையை காண செல்லவில்லை என்றாலும், என் தங்கைக்கும், அவருடைய கணவருக்கும் இடையே எதிரிகளால் தான் தகராறு ஏற்படுகிறது என்று தவறாக புரிந்து கொண்டு எதிரிகளை தாக்குவதற்காக ஆட்களை அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. 2-ம் எதிரி பிருந்தாவை நான் தான் அடித்தேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்ததாக சொல்லப்படும் அன்று போலிஸார் உடனடியாக வந்தனர் என்றால் சரிதான். போலிஸாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. நாங்கள் எதிரிகளை அடித்ததால் எதிரிகள் தான் போலிஸாருக்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரியல்ல. போலிஸார் வாக்குமூலத்தில் நான் நீதிமன்றத்தில் கூறியதை தான் கூறினேன். அதன் பிறகு மீண்டும் போலிஸார் என்னை விசாரிக்கவில்லை. அரசு மருத்துவமனைக்கு இரவு 09.00 மணிக்கு சென்றேன். அரசு மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு சென்றேன், எங்கு வைத்து கையெழுத்திட்டேன் என்று ஞாபகம் இல்லை. நகையை நான் பெற்றுகொண்டதாக தவறாக போலிஸார் வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளனர். மேற்படி நகையை நான் பெற்று கொண்டதாக கூறியுள்ளது தவிற மற்ற அனைத்தும் நான் கூறியுள்ளது தான் உள்ளது. எதிரிகளை நான் தான் தாக்கினேன் என்றாலும், அதனால் தான் முன்னுக்கு பின்னாக முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகைகள் கிடைக்காதால் மேற்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நகைகள் எதுவும் காணாமல் போகவில்லை என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு ஆம்புலென்ஸ்ஸில் ஏற்றும்போது 7-8 நபர்கள் இருந்தனர். என் தங்கைக்கும், அவருடைய கணவருக்கும் உள்ள பிரச்சினையை மனதில் வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.24 17:51:56 +0530

**CC.No.432/2025 (JM.No.II, DHARMAPURI)**

**24.02.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரிகள் ஆஜர்)**

**PW–2 : திருமதி.நதியா , க/பெ. தனசேகர்**

**முதல் விசாரணை**

நான் மேல்பூரிக்கல்லில் குடியிருந்து கொண்டு ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1–ம் எதிரி என் நாத்தனாரின் கணவரின் தம்பி மற்றும் தம்பி மனைவி ஆவார். அ.சா.1 என்னுடைய கணவர் ஆவார். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 06.30 மணிக்கு நான் என்னுடைய நாத்தனாரான சாட்சி–4 ஆன கஸ்தூரிக்கு உடல் நிலை சரியில்லாததால் அறுவை சிகிச்சை செய்து கொண்டு 3 மாதம் என்னுடைய வீட்டில் இருந்தார். அவருடைய வீட்டிற்கு நானும், அ.சா.1ம், பெரிய நாத்தனார் கலைச்செல்வி ஆகியோர் சென்றிருந்தோம். அப்போது நாங்கள் செல்வதற்கு முன் நாத்தனாருக்கும், அவருடைய கணவருக்கு ஏதோ பிரச்சினை நடந்ததாக நாத்தனார் கஸ்தூரி எங்களிடம் பேசி கொண்டிருந்தார். அப்போது இங்கு எதற்கு வந்தாய் என்று 2–ம் எதிரி பிருந்தா எங்களிடம் பிரச்சினையில் ஈடுபட்டார். நான் பிரச்சினை எதுவும் வேண்டாம் என்று நானும், சாட்சி–3, என் கணவரும் வெளியே வந்து இருசக்கர வாகனத்தில் உட்காரும் போது திடீரென்று 2–ம் எதிரி பிருந்தா இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்திருந்த என் முடியை பிடித்து கீழே இழுத்து தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்ததில் மயக்கம் ஏற்பட்டது. எதிரிகள் இருவரும் சேர்ந்து கட்டையால் என் கணவரின் தலையில் கட்டையால் தாக்கியதில் 13 தையல் போடப்பட்டது. தொப்பூர் போலிஸார் சம்பவயிடத்திற்கு வந்து அ.சா.1 யை 108 ஆம்புலென்ஸ் மூலமாக தொப்பூர் போலிஸ் தான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகளின் வீட்டின் முன்பு தான் சண்டை நடந்தது என்றால் சரியல்ல, என் நாத்தனாரின் வீட்டின் முன்பு தான் சண்டை நடந்தது. என்னுடைய நாத்தனார் வீட்டிற்கு மாலை சுமார் 06.00 மணியளவில் சென்றோம். சாட்சி–4 ஆன என் நாத்தனாருக்கும், அவருடைய கணவருக்கும் சண்டை நடந்ததாக கூறியதால் தான் நாங்கள் அவர்களுடைய வீட்டிற்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று சென்றோம் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய நாத்தனாருக்கும் உடல்நிலை சரியில்லாததால் தான் அங்கு சென்றோம். சாட்சி–4 ஆன என் நாத்தனாருக்கும், அவருடைய கணவருக்கும் அடிக்கடி சண்டை நடக்கும் என்றால் சரிதான். எதிரிகளின் குடும்பத்திற்கும், என் நாத்தனாரின் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். சாட்சி–4 ஆன என் நாத்தனாரின் பெண்ணை எதிரிகள் தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். சாட்சி–4 ஆன என் நாத்தனாருக்கும், அவருடைய கணவருக்கும் ஏற்படும் பிரச்சினைக்கு எதிரிகள் தான் காரணம் என்று நாத்தனார் கூறியதால் தான் நாங்கள் தகராறு செய்ய சென்றோம் என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் தாக்க சென்றதால் தான் எதிரிகள் போலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர் என்றால் சரியல்ல. நான் கீழே விழுந்து மயக்கமான பின்னர் என் கணவரான அ.சா.1

யை யார் அடித்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் எதிரிகளை அடிக்க சென்ற போது அவர் தானாக கீழே விழுந்து காயம் ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. என்னை 2–ம் எதிரி கீழே பிடித்து தள்ளவில்லை என்றாலும், நான் கீழே விழவில்லை என்றாலும்,பொய்யாக மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM
Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.24 17:52:03 +0530

**CC.No.432/2025 (JM.No.II, DHARMAPURI)**

**24.02.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரிகள் ஆஜர்)**

**PW–3 : திருமதி.கலைச்செல்வி , க/பெ. செல்வராஜ்**

**முதல் விசாரணை**

நான் மேல்பூரிக்கல்லில் குடியிருந்து கொண்டு ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1–ம் எதிரி என் நாத்தனாரின் கணவரின் தம்பி மற்றும் தம்பி மனைவி ஆவார். அ.சா.1 என்னுடைய அண்ணன் ஆவார். அ.சா.2 என்னுடைய அண்ணி ஆவார். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 06.30 மணிக்கு என்னுடைய தங்கை சாட்சி–4 ஆன கஸ்தூரிக்கு உடல் நிலை சரியில்லாததால் அறுவை சிகிச்சை செய்து கொண்டு 1 மாதம் என்னுடைய அண்ணன் வீட்டில் இருந்தார். பின்பு அவர் அவருடைய வீட்டிற்கு சென்றுவிட்டார். அவருடைய வீட்டிற்கு நானும், அ.சா.1ம், அ.சா.2 ஆகியோர் சென்றிருந்தோம். நாங்கள் சாட்சி–4 யை பார்த்து விட்டு திரும்ப வரும்போது எதிரிகள் இருவரும் எதற்கு இங்கு வந்தாய் என்று கேட்டனர். அதற்கு என் தங்கையை பார்ப்பதற்கு நாங்கள் வராமல் யார் பார்க்க வருவார்கள் என்று கூறினோம். நாங்கள் மூவருமே இருசக்கர வாகனத்தில் உட்காரும் போது எதிரிகள் இருவரும் திடீரென்று இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்திருந்த அ.சா.2 யை பிடித்து கீழே இழுத்து தள்ளிவிட்டார். அதில் அவர் கீழே விழுந்ததில் மயக்கம் ஏற்பட்டது. அவரை பார்ப்பதற்குள் அ.சா.1 யை 1–ம் எதிரி கட்டையால் என் அண்ணனின் தலையில் கட்டையால் தாக்கியதில் அவரின் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. பின்பு 108 ஆம்புலென்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சாட்சி–4 கஸ்தூரி வீட்டிற்கு மாலை 06.00 மணிக்கு சென்றேன், தேதி ஞாபகம் இல்லை. நான் அண்ணா வீட்டிற்கு அருகே வசித்து வருகிறேன். சாட்சி–4 கஸ்தூரிக்கும், அவருடைய கணவருக்கும் தகராறு ஏற்பட்டதாக போன் செய்து கூறியதால் தான் நான் சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 06.30 – 07.00 இருக்கும். அடிப்பட்டு மருத்துவமனைக்கு 08.00 மணிக்கு சென்றோம். போலிஸாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது போலிஸார் அங்கு வந்தனர். நானும், என்னுடைய அண்ணாவும் எதிரிகளை அடித்ததால் தான் எதிரிகள் போலிஸாருக்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரியல்ல. என் அண்ணாவான அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.24 17:52:11 +0530

**CC.No.432/2025 (JM.No.II, DHARMAPURI)**

**24.02.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரிகள் ஆஜர்)**

**PW–4 : திருமதி.கஸ்தூரி , க/பெ. வடிவேல்**

**முதல் விசாரணை**

நான் மேல்பூரிக்கல்லில் குடியிருந்து கொண்டு ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1–ம் எதிரி என் கொழுந்தனார் மற்றும் கொழுந்தனார் மனைவி ஆவார். அ.சா.1 என்னுடைய அண்ணன் ஆவார். அ.சா.2 என்னுடைய அண்ணி, அ.சா.3 என்னுடைய அக்கா ஆவார். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 06.30 மணிக்கு எனக்கு உடல் நிலை சரியில்லாததால் அறுவை சிகிச்சை செய்து கொண்டு 2 மாதம் இருந்துவிட்டு பின்பு என் கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்கள் என்னை பார்ப்பதற்காக அன்றிரவு 07.00 மணிக்கு வீட்டிற்கு வந்தார்கள். வீட்டிற்கு வந்த அவர்களை எதிரிகள் இருவரும் சேர்ந்து கொண்டு எதிரிகள் அ.சா.1 மற்றும் 2 யை தாக்கினார்கள். அ.சா.1 முதல் 3 வரும் வண்டியில் உட்கார்ந்த போது 2–ம் எதிரி அ.சா.2 ன் முடியை பிடித்து கீழே தள்ளினார். 1–ம் எதிரி அ.சா.1 யை கட்டையால் தாக்கினார். அதில் அ.சா.1 ற்கு சம்பவயிடத்திலேயே மயக்கம் வந்துவிட்டது. பின்பு 108 ஆம்புலென்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சென்று பார்க்கும் போது என் அண்ணன் கழுத்தில் இருந்த 1 ½ பவுன் செயின் காணவில்லை. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னுடைய அண்ணா வீட்டிலிருந்து எப்போது என் வீட்டிற்கு சென்றேன் என்றால், இரண்டு மாதம் கழித்து சென்றுவிட்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு நான் என்னுடைய வீட்டிற்கு சென்றுவிட்டேன். என் கணவர் கோயம்புத்தூரில் இருக்கிறார் என்றாலும், என் கணவருக்கும் எனக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்படும் என்றால் சரிதான். என் கணவரிடம் சண்டை போட்டு கொண்டு தான் கோயம்புத்தூரிலிருந்து என்னுடைய வீட்டிற்கு வந்து பின்பு அண்ணன் வீட்டிற்கு சென்றேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எனக்கும், என் கணவருக்கும் பிரச்சினை என்று என் அண்ணனுக்கு போன் செய்து சொன்னதால் தான அவர் என்னை பார்க்க வந்தார் என்றால் சரிதான். மேற்படி என்னுடைய அண்ணன் எங்களுடைய பிரச்சினை குறித்து கேட்க வரும் போது தான் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளிடம் என் அண்ணா எதுவும் கேட்கவில்லை. எதிரிகளுக்கும், எனக்கும் பக்கத்து பக்கத்து வீடு என்றாலும், பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். என்னுடைய மகள் எதிரிகளிடம் தான் இருக்கிறார் என்றாலும், அவர்கள் தான் பராமரித்து வருகிறார் என்றாலும் சரிதான். என் மகளை எதிரிகள் தான் பராமரிப்பதால் தான் அவர்கள் எங்களை பிரச்சினை செய்ய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என் அண்ணா (அ.சா.1) மற்றும் அண்ணியை(அ.சா.2) நான் தான் தகராறு செய்வதற்காக வர சொன்னேன் என்றால் சரியல்ல. என் அண்ணா தான் தகராறு செய்வதற்காக 10 நபர்களை அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஆகிய என்னுடைய அண்ணனுக்கு தகராறில் அடிப்பட்டது. என்னுடைய அண்ணிக்கு

மயக்கம் ஏற்பட்டது. அ.சா.1 தான் எதிரிகளை அடிக்க சென்றார் என்றாலும், அப்போது தான் கீழே விழுந்து அடிப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பின்னர் போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.24 17:52:17 +0530